இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 241 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 29 – ஞாயிற்றுக்கிழமை 12 ஏப்ரல் 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 241 : Thiruvalluvar Year - 2057 - Panguni 29 - Sunday 12 April 2026 - Madurai 12 Pages ₹ 5.00

### மாடுகட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டி போரடித்த தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம்

## தஞ்சை மண்ணில் 'திராவிட நாயகர்' உரைகேட்க திரண்டிருந்த மக்கள்!



### நெல்லுக்கான ஊக்கத் தொகையை நிறுத்தக் கூறிய

# ஒன்றிய பா.ஜ.க. அரசை எடப்பாடி பழனிசாமி கண்டிக்கத் தயாரா?



### தஞ்சையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில்

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

**தஞ்சை, ஏப். 12 –**

**நெல்லுக்கான ஊக்கத் தொகையை நிறுத்தக் கூறிய ஒன்றிய பா.ஜ.க. அரசை எடப்பாடி பழனிசாமி கண்டிக்கத் தயாரா? என்று தஞ்சையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.04.2026) தஞ்சையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

மாடு கட்டி போரடித்தால் மாளாது என்று; யானை கட்டி போரடித்த மண், இந்த தஞ்சை மண்! காவிரித்தாயின் மண்ணுக்கு கலைஞரின் மகன் வந்திருக்கிறேன். மே 4 - திராவிட மாடல் 2.0 வெற்றியை அறுவடை செய்ய தஞ்சாவூர் தயாரா? தயார் (மக்கள்). நன்றி… அதற்கான களத்தை தயார் செய்யத்தான் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

### அண்ணன் கோ.சி.மணியின் மண்ணுக்கு வந்திருக்கிறேன்!

தஞ்சாவூர் வந்ததும் என்னுடைய நினைவுக்கு வந்தது, 'டெல்டா மண்ணின் மைந்தர்' மரியாதைக்குரிய அண்ணன் கோ.சி.மணி அவர்கள்! அவர் எப்படியெல்லாம் இந்தப் பகுதியை வளர்த்தெடுத்தார், தலைவர் கலைஞரின் நம்பிக்கைக்குரிய போர்ப்படைத் தளபதியாக இருந்தார் என்பதெல்லாம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அப்படி அவர் கட்டிக் காத்த மண்ணுக்கு - இந்த தஞ்சை மண்டலத்திற்கு நான் வந்திருக்கிறேன்.

தஞ்சைத் தரணிக்கு வந்தாலே, இனம்புரியாத ஒரு கம்பீரம் பிறக்கிறது. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி, சோழ சாம்ராஜ்யத்தை மிகப் பெரிய அளவில் விரிவுபடுத்திய ராஜராஜ சோழனும், கங்கை வரை சென்று வெற்றிக்கொடி நாட்டிய ராஜேந்திர சோழனும்தான் தமிழர்களின் கம்பீரத்துக்கு காரணம்!இப்படி சிறப்புகளுக்கு பஞ்சமில்லாத மாவட்டத்துக்கு, சிறப்பான நம் ஆட்சி தொடர ஆதரவு கேட்டு வந்திருக்கிறேன்.

தஞ்சைக்கு நான் வருவது புதிதா? பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு, விழாக்களுக்கு வந்தது உண்டு. அரசு நலத்திட்ட விழாக்கள், கல்லணையில் இருந்து பாசனத்திற்காக நீர் திறந்து விடும் நிகழ்வு, பீமனோடை தூர்வாரும் பணிகள் ஆய்வு, ஆலக்குடியில் தூர்வாரும் பணிகள் ஆய்வு, திராவிடர் கழகம் நடத்திய கலைஞர் நூற்றாண்டு விழா, இங்கு மேடையில் இருக்கும் சகோதரர் துரை சந்திர சேகரன் இல்லத் திருமண விழா, நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை என்று தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறேன்.

### 200 தொகுதிகளையும் தாண்டி வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது!

அண்மையில்கூட, நம்முடைய அருமைச் சகோதரர் வைத்திலிங்கம் தலைமையில், பல்லாயிரம் பேர் கழகத்தில் இணைந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அது முடிந்ததும், டெல்டா மண்டல 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' மாநாட்டை தஞ்சாவூரில் நடத்தினோம். அதற்காகவும் வந்திருந்தேன்.

அடுத்து இப்போது, என்னுடைய பரப்புரைப் பயணத்தை தொடங்கியதும், இதே ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த, திருவாரூரில்தான்! தொடர்ந்து, மாநிலத்தில் தெற்கு, மேற்கு, வடக்கு என்று சுற்றி, மீண்டும் இதயப்பகுதியான டெல்டாவுக்கே வந்துவிட்டேன். திராவிட மாடல் நல்லாட்சி தொடர வேண்டும் என்று தமிழ்நாடே இன்றைக்கு சொல்கிறது. அதற்கு, தஞ்சையும் தயாரா? தயார் (மக்கள்). 200 உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! 200 தொகுதிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### தி.மு.க.–வில் யாரும் தொடர்ந்து 2 முறை முதலமைச்சர் ஆனது இல்லையாம்…

## அதையும் உடைக்கிறேன் பாருங்கள்…



**2021 தேர்தலின்போது, "முதலமைச்சர் ஆகும் யோகம் ஸ்டாலினுக்கு இல்லை" என்று சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். யோகத்தை நம்பி சும்மா இருப்பவனா இந்த ஸ்டாலின்? அதிர்ஷ்டம் இல்லையென அலுத்துக் கொள்பவனா இந்த ஸ்டாலின்? நான் யோகத்தை நம்புபவன் இல்லை, என்னுடைய உழைப்பை நம்புபவன்! தலைவர் கலைஞரிடம் உழைப்பை கற்றுக்கொண்ட மாணவன் நான்!**

**அதேபோன்று இப்போது, 2026 தேர்தலுக்கு என்னென்ன சொல்கிறார்கள்? தி.மு.க.–வில் யாரும் தொடர்ந்து 2 முறை முதலமைச்சர் ஆனது இல்லையாம்… சென்ற முறை நீங்கள் சொன்னதை உடைத்து, நான் முதலமைச்சர் ஆனேன். 2–வது முறை இல்லை என்று சொல்கிறார்களே? அதையும் உடைக்கிறேன் பாருங்கள்…**

**- தஞ்சை பொதுக்கூட்டத்தில்**
**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்**